Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 18 (03-09-1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 197

## வடபகுதியின் நிலை அறிய இராணுவம் தீவிர முயற்சி

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் பகுதியில் வடபகுதியில் இருந்து செல்லும் பயணிகளின் கருத்து மற்றும் வடபகுதி நிலைமைகளை அறிவதற்குச் சிறிலங்கா இராணுவத்தினரால் அலுவலகம் ஒன்று செயற்படத் தொடங்கியுள்ளது வடபகுதியிலிருந்து செல்லும் பிரயாணிகள் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ள இந்த அலுவலகத்திற்குள் புகுந்து அங்கு அமர்ந்திருக்கும் அதிகாரியிடம் வடபகுதி நிலைமை பற்றியும், தற்போதைய யுத்தம்பற்றிய அபிப்பிராயத்தையும் கூறவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் பயணிகளின் நெருக்கடியைக் (4 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய-பாக். எல்லையோரம் முறுகல்

# கிராமங்கள் மீது பீரங்கித் தாக்குதல்

## இருபகுதியிலும் உயிர், உடமைகள் சேதம்

(டில்லி)

இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இரு நாட்டு இராணுவத்தினருக்கும் இடையில் கடும் பீரங்கித் தாக்குதல் நடைபெற்றுள்ளது. அதேவேளை இவ்விரு நாடுகளும் நிர்ணய எல்லைக் கோட்டை ஒருவர் தாண்டியதாக மற்றவர் பரஸ்பரம் குற்றம சாட்டியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக காஷ்மீர் மாநில எல்லைப் பகுதியில் இந்திய பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு இடையில் நடைபெற்று வந்த துப்பாக்கிச்சூட்டுப் பரிமாறல் தற்பொழுது பீரங்கித் தாக்குதலாக மாறியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவமும் காஷ்மீர் தீவிரவாதிகளும் நிர்ணய எல்லைக் கோட்டைத் தாண்டி அடிக்கடி இந்திய எல்லைக் கோட்டைத் தாண்டி இந்தியாவிற்குள் புகு முனைவதை இந்தியா அடிக்கடி குற்றம்சாட்டி வருகின்றது அதேவேளை இந்திய இராணுவத்தினர் பாகிஸ்தான் தமது எல்லைக்குள் இந்தியா புகுவதாகக் குற்றம் சாட்டி வருகின்றது.

அதேவேளை நேற்று ஜம்மு-காஷ்மீரில் அமைந்துள்ள இந் (4 ஆம் பக்கம் பார்க்க)

### மோதல் தொடர்பாக பேச்சுக்கள்

ஜம்மு-காஷ்மீர் இந்திய எல்லையில் இடம பெற்று வரும் மோதல் தொடர்பான பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்துள்ளன

(4 ஆம் பக்கம் பார்க்க)

### படத் தயாரிப்பாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும்தொலைக்காட்சிப் படங்கள் தயாரித்தவர்களும், தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்களும் தயாரிக்க விரும்புபவர்களும் வரும் வியாழக்கிழமை (5-9-91) காலை 10-00 மணிக்கு நிதர்சனம் அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு அதன் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஒலிபரப்புக் கூட்டுத்தா. மீது லலித் கண்டனம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துல்த் முதலி சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவருக்கும் பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தில் அமைச்சரவையிலிருந்து தாமும் சில அமைச்சர்களும் இராஜினாமா செய்தது பற்றி மேற்படி கூட்டுத்தாபனம் அறிவிக்கத் தவறியது குறித்துக் கண்டனம் தெரிவித்துள்ளார்,

முன்னாள் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் ஓர் சிறிலங்காப் பிரசை என்ற வகையில் தான் கண்டனத்தை தெரிவிப்ப (4ஆம் பக்கம் பார்க்க)

### ரங்கன் நீதிமன்றத்தில் ஆஜர்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணைகளைநடத்திவரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் சிவராச (4ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நெருக்கடியை ஆராய சி. சு. கட்சி கூட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிறிமாவோபண்டாரநாயக்கா தலைமையில் தற்போதைய அரசியல் நெருக்கடி பற்றி ஆராயக் கூட்டம் நடத்தவுள்ளது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தை தற்காலிகமாகத் தடைசெய்ததை கண்டித்து சுதந்திரக் கட்சி அறிக்கை ஒன்று வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

சுதந்திரக்கட்சி தலைமையிலான பிரேமதாசா அதிருப்தியாளர் கூட்டணி மூன்றில் இருபங்கு வாக்குகளைப் பெறத் தவறினாலும் கூட ஐ. தே கட்சிக்குள் ஏற்பட்டி (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோரில் சிக்கி ஒரு சிப்பாய் பலி

திருமலை மாவட்டத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளினால் மிதிவெடியுடன் இணைத்து வைக்கப்பட்ட கிளைமோர் வெடித்ததால் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை எட்டு மணியளவில் சம்பூர் ஆறாங்கட்டைக்கும் ஏழாம் கட்டைக்கும் இடையே நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தை ஊர்ஜிதப் படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது.

## இந்திய புலனாய்வுக் குழு மீண்டும் கொழும்பிற்கு

## காஷ்மீர் பூஞ்சி பகுதியில் ஆயுதங்கள் சடலங்கள் மீட்பு

(சிறிநகர்)

ஜம்மு-காஷ்மீரில் பூஞ்சி நகக்கு அண்மையில் பெருமளவு ஆயுதங்களையும், வெடிமருந்துப் பொருள்களையும், இரண்டு சடலங்களையும் எடுத்துள்ளதா இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் ஜம்மு காஷ்மீரில் உள்ள பூஞ்சி நகரில் இந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு மாவட்டத்தில் புலிகள் - இராணுவம் மோதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காஇராணுவத்தினருக்கும் இடையில் நேற்று கடும் மோதல் ஏற்பட்டது. இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இம்மோதல் இடம் பெற்ற வண்ணம் இருந்ததாக அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் சண்டையின்முழு விபரம் எதுவும் எட்டாததால் இராணுவ தரப்பிலோ விடுதலைப் புலிகளின் தரப்பிலோ ஏற்பட்ட இழப்பு பற்றி எதுவும் தெரியவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் புறங்களிலும் வெலிஓயாப் பகுதியிலும் (மணலாறு) விடுதலைப் புலிகளுக்கு எதிராக 30ஆம் திகதி முதல் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வவுனியாவிலுள்ள சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வெளிநாட்டுசக்திகள் எவற்றுடனும்

### பிரேமாவிற்கு 166 பேர்ஆதரவு?

பிரேமதாசாவுக்கு ஆதரவாக 166

ஆராயக் கூட்டம் நடத்தவுள்ளது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தை தற்காலிகமாகத் தடைசெய்ததை

தியாளர் கூட்டமே முன்னர் இரு பங்கு வாக்குகளைப் பெறத் தவறினாலும் கூட ஐ. தே கட்சிக்குள் ஏற்பட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

காஷ்மீர் மாநில எல்லைப் பகுதியில் இந்திய பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு இடையில் நடைபெற்று வந்த துப்பாக்கிச்சூட்டுப் பரிமாறல் தற்பொழுது பீரங்கித் தாக்குதலாக மாறியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவமும் காஷ்மீர் தீவிரவாதிகளும் நிர் தாண்டி அடிக்கடி இந்திய எல்லைக் கோட்டைத் தாண்டி இந்தியாவிற்குள் புகு முனைவதை இந்தியா அடிக்கடி குற்றஞ்சாட்டி வருகின்றது அதேவேளை இந்திய இராணுவத்தினர் பாகிஸ்தான் தமது எல்லைக்குள் இந்தியா புகுவதாகக் குற்றம்

அதேவேளை நேற்று ஜம்மு-காஷ்மீரில் அமைந்துள்ள இந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வார்த்தைகள் ஆரம்பித்துள்ளன

(4ஆம் பக்கம் பார்க்க)

மளிக்குமாறு அதன் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# கிளைமோரில் சிக்கி ஒரு சிப்பாய் பலி

திருமலை மாவட்டத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளினால் மிதிவெடியுடன் இணைத்து வைக்கப்பட்ட கிளைமோர் வெடித்ததால் படுகாயமடைந்து சேதத்திற்குள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை எட்டு மணியளவில் சம்பூர் ஆறாங்கட்டைக்கும் ஏழாம் கட்டைக்கும் இடையே நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவத்தை ஊர்ஜிதப் படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது.

# காஷ்மீர் பூஞ்சி பகுதியில் ஆயுதங்கள் சடலங்கள் மீட்பு

(சிறிநகர்)

ஜம்மு-காஷ்மீரில் பூஞ்சி நகருக்கு அண்மையில் பெருமளவு ஆயுதங்களையும், வெடிமருந்துப் பொருள்களையும், இரண்டு சடலங்களையும் எடுத்துள்ளதாக இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் ஜம்மு காஷ்மீரில் உள்ள பூஞ்சி நகரில் இந்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாறு மாவட்டத்தில் புலிகள் - இராணுவம் மோதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காஇராணுவத்தினருக்கும் இடையில் நேற்று கடும் மோதல் ஏற்பட்டது. இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை இம்மோதல் இடம்பெற்ற வண்ணம் இருந்ததாக அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் சண்டையின் முழு விபரம் எதுவும் எட்டாததால் இராணுவ தரப்பிலோ விடுதலைப் புலிகளின் தரப்பிலோ ஏற்பட்ட இழப்பு பற்றி எதுவும் தெரியவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் புறங்களிலும் வெலிஓயாப் பகுதியிலும் (மணலாறு) விடுதலைப் புலிகளுக்கு எதிராக 30ஆம் திகதி முதல் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வவுனியாவிலுள்ள சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இந்திய புலனாய்வுக் குழு மீண்டும் கொழும்பிற்கு

(கொழும்பு)

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் இந்திய விசேட புலனாய்வுக் குழு மீண்டும் கொழும்பிற்கு வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலை தொடர்பான முக்கிய சூத்திரதாரிகளை கண்டு பிடிப்பதற்கான தகவல்களை சிறிலங்கா அதிகாரிகளிடம் பெறுவதற்காகவே இவர்கள் வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டுசக்திகள் எவற்றுடனும் எமக்கும் எதுவிதத்தொடர்புமில்லை

(கொழும்பு)

அந்நிய சக்தியின் உதவியோடு தான் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மீது குற்ற விசாரணை தீர்மானம் எடுத்ததாக வெளிவந்த கூற்றை லலித் அத்துலத்முதலி மறுத்துள்ளார்.

நேற்று கொழும்பில் லலித் அத்துலத்முதலி பத்திரிகைகள் சிலவற்றில் வந்த இச் செய்தியினை மறுத்து கருத்து வெளியிடுகையில் ''எந்த ஒரு அந்நிய சக்தியும் தூண்டிவிட்டு தாங்கள் செயல்படவில்லை'' என்று தெரிவித்தார்.

குற்றச்சாட்டுமனுவில் கைச்சாத்திட்ட 47 பேருக்கும் எந்த ஒரு நாடும் ஆதரவு வழங்கவில்லை என்று கூறிய அத்துலத்முதலி ஜனாதிபதி பிரேமதாசா அவர்களால் மூடப்பட்ட கேளிக்கைக் கூடங்களின் சொந்தக்காரர்கள் தான் ஜனாதிபதி பிரேமதாசாவிற்குஎதிரானநடவடிக்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமாவிற்கு 166 பேர்ஆதரவு?

பிரேமதாசாவுக்கு ஆதரவாக 166 ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர்கள் கையொப்பமிட்ட மனுவை இன்று சபாநாயகரிடம் கையளிக்க உள்ளதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது

இருந்த போதிலும் சிறிலங்கா பாராளுமன்றத்தில் 125 எம் பீக்களே ஐக்கியதேசியக் கட்சியை சேர்ந்தவர்கள் என்பதுகுறிப்பிடத்தக்கதாகும்

# வவுனியா நகர் வருவோர் கால்நடையாக மட்டுமே வர இராணுவம் பணிப்பு

வடபகுதியிலிருந்து வவுனியா நகரப் பகுதி நோக்கிச் செல்வோர்கால்நடையாகவே வரவேண்டும் என்று தாண்டிக்குளம் பகுதி இராணுவத்தினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

31ஆம் திகதி அரசாங்க ஊழியர்களைத் தவிர மற்றைய அனைத்து மக்களும் கால்நடையாகவே வரவேண்டுமாம் இதே மாதிரி வவுனியா நகரிலிருந்து எவரும் சைக்கிள்களில் வடபகுதி நோக்கிச் செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளதாம். (தி)

# கருத்துக் கணிப்பு மூலமே ஜனாதிபதியை நீக்கமுடியும்

இப்போதுள்ளநிர்வாக ஜனாதிபதிமுறையை மக்கள்கருத்து வாக்கெடுப்பு மூலம் மட்டுமே மாற்றமுடியும் என்று ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

1978 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவந்துள்ள ஒவ்வொரு தேர்தல்களிலும் மக்கள் ஜனாதிபதி ஆட்சி முறையை ஏற்று அங்கீகரித்துள்ளனர் என்றும், ஆகவே கருத்துக்கணிப்பு மூலமே இதனை மாற்ற முடியும் என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

# ஐ. தே.க 20 அங்கத்தவர்கள் பெரும்பான்மையுள்ளதாம்

சிறிலங்கா ஜனாதிபதி மீது குற்றஞ்சாட்டும் பிரேரணை முன்னறிவித்தல் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் வேறுபட்டு நிற்கின்றபோதும் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு இருபது அங்கத்தவர்கள் பெரும்பான்மையாகவுள்ளனர் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆர். பிரேமதாசா மீது அரசியல் குற்றஞ்சுமத்த எடுக்கப்பட்ட முயற்சி இலகுவாக முறியடிக்கப்படும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# அதிருப்தியாளர்களும் பாராளு. குழுக் கூட்டத்தில்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுவில் கையெழுத்திட்டவர்களை ஜனாதிபதி செயலகத்தில் அவரால் கூட்டப்பட்ட கூட்டத்திற்குப் போகும்படி அதிருப்தியாளர்கள் கேட்டிருக்கிறார்கள்.

நேற்றுக் கூடிய ஐ தே. கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் நண்பர்கள் யார், எதிரிகள்யார் என்பதை பிரேமதாசாவினால் கண்டு கொள்ளமுடியவில்லையாம்.

ஐ தே கட்சிப் பாராளு

(4ஆம் பக்கம் பார்க்க)

# லெப். இளஞ்செழியன் உருவப்பட திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டில் சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட கவிஞர் வாஞ்சிநாதனின் ஒரே மகனான வீரவேங்கை லெப்டினன்ட் இளஞ்செழியனின் உருவப்படம் இன்று திரை நீக்கம் செய்யப்படவுள்ளது.

இன்றுமாலை 5 மணிக்கு மயிலியதனை தொண்டமானாறு பாலச்சந்திரன் வீதியில் செழியனின் உருவப்படத்தை அவரது தாயார் திரைநீக்கம் செய்து வைப்பார்.

மாவீரர்களின் பெற்றோர்களால் நடாத்தப்படவுள்ள இந் நிகழ்விற்கு தியாகி சிவ

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரகசிய வாக்கெடுப்பு லலித் ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுமீது பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தலாம் என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார். இப்போதுள்ள நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்கான தலைசிறந்த வழி இரகசிய வாக்கெடுப்புத் தான் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரேமதாசா எதிரணியினர் கூட்டுசெயற்குழு அமைப்பு

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனு மீது கையெழுத்திட்ட எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் ஐ தே கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் மேற்கொண்டும் நடவடிக்கைகளை எடுக்க கூட்டுசெயற்குழு ஒன்றை நியமித்துள்ளார்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 17 - 08 - 1975



தமிழீழ மண்ணில் 13 - 09 - 1990

### வீரவேங்கை குருபரன்

(சங்கரலிங்கம் யோகசேகரன் (கரன்)

திகதி 3.9.1991

இரத்தத்தால் சிவந்து கொண்டிருக்கும் இம் மண்ணிலே
சிந்தனையுடன் போராடிய வீரப்புலி- குருபரா
தமிழீழ மண்ணுக்காய் தன்னையே ஈந்து
களத்தினிலே சமரிட்டு களப்பலியானாய்
கோட்டையிலே எதிரியுடன் சமராடி
தமிழீழ மண்ணுக்காய் இரத்தம் சிந்தியவனே
உன் இலட்சிய எண்ணங்கள் நெஞ்சை விட்டு நீங்காது
உனது பாதையில் எங்கள் பயணம் தொடரும்

கொக்குவில் மேற்கு


பெற்றோர், சகோதரர்கள்.

(R/1691)

## 45-ம் நாள் நினைவுதினம்

வீரஜனனம் 1970 . 05 . 16

வீரமரணம் 1991 . 07 . 21



(கட்டைக்காட்டில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### மேஜர் கோணேஸ்

பாசத்தால் இணைந்த பெறாமகனே கோணேஸ்;
உள்ளத்தால் இணைந்த உடன்பிறவா சகோதரனே- உன்
சிரித்தமுகம் காணாமல் தவிக்கிறோமடா
எம் பாசங்களை மறந்து நம் மண்ணிற்காய்-நீ
செய்த தியாகம் கொஞ்சமோ - ஆனால்
நீ தமிழ் மண்ணையும் மக்களையும் நேசித்தாய்
உன்மரணத்தை மறந்தாய் - என்றும்
உன் நினைவு மறையாது எம் நெஞ்சைவிட்டு.

சண்டிலிப்பாய்
சுண்டிக்குழி யாழ்ப்பாணம்.
(B-3047)

குழந்தை குடும்பத்தினர் உடன் பிறவா சகோதர சகோதரிகள், உயிர்நண்பர்கள்

## வரி விளம்பரம்

சலவைக்குப் புனலைக்காய்

புனலைக்காயை நீரிலிட்டு நுரைவரும்வரை அலசி அதனுள் துணிகளை ஊறவிட்டுத் துவைத்து அழுக்கைப் போக்கலாம். புனலைக்காய் ½ கிலோபக்கற்ரூபா 25/-யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில் அண்ணா கோப்பி கடைகளில்கிடைக்கும் -மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/3052)

## "ஈச்சமோட்டை" வெற்றி பெற்றது

கொய்யாத்தோட்ட ஐக்கிய சனசமூக நிலையத்தின் 21வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட 20பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஈச்சமோட்டை சனசமூக நிலைய அணி அதனை எதிர்த்து ஆடிய நொதேண் விளையாட்டுக் கழக அணியை 11 ஓட்டங்களால் தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஈச்சமோட்டை சனசமூக நிலைய அணி 19 5 பந்து மாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 70ஓட்டங்களைப் பெற்றது. ஆட்ட ஆரம்பத்தில் ஈச்சமோட்டைஅணி அணி 9பந்து மாற்றங்களில் 6இலக்குகளை துரிதகதியில் இழந்து 21ஓட்டங்களை மாத்திரமே பெற்று நிலைகுலைந்து ஆபத்தான கட்டத்தில் இருந்தது. அதன்பின் துடுப்பெடுத்தாட களத்தில் இறங்கிய தொம்மைப்பிள்ளை குணம், அல்பிரட் ரெட்ணா ஆகிய இரு வீரர்களும் நிதானமாகவும், சாதுரியமாகவும் ஆடி ஓட்டங்களை எடுத்ததினால் ஈச்சமோட்டை அணி மீட்சி பெற்றது.

## 45-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 22 — 3 — 1973



வீரமரணம் 21 — 7 — 1991

### வீரவேங்கை நிசாந்தன்

(இராசதுரை நந்துகுமார்)

அன்பின் தம்பி நிசாந்தா
நீ எங்கள் தெய்வமன்றோ!
மண்ணினை மீட்டுவொரு
வரலாறு படைக்கவென
களத்தினில் குதித்திட்ட
வேங்கைப் புலியன்றோ!
உன் நினைவால் உதிர்கின்ற
எம் கண்ணீர் முத்துக்கள்
நெஞ்சமதில் உறைந்து
வேதனையைத் தருகின்றதடா!
வானத்தைப் பார்த்துப் பார்த்து
எங்கள் கண்களும் பூத்ததடா!
உன்னைக் கை நீட்டி அழைக்கின்றோம்.
நீ ஓடோடி வாராயோ
உன் பால்முகத்தைக் காட்டாயோ!

இவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட ஏனைய போராளிகளையும் இந்நாளில் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய் (B/3048)

இப்படிக்கு
குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர்கள்

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

ஈன்றவர் கண்ணில் மலர்ந்தது 05 — 07 — 1976



ஈழவர் மண்ணில் சொரிந்தது 21 — 07 — 1991

### வீரவேங்கை நேரு

(சாம்பமூர்த்தி குமரேசன்)

புத்தூர் மேற்கு, புத்தூர்

நாட்டினிலே மக்கள்படும் துன்பமதை நீக்கிட

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம்...

1991 - 09 - 03

பெனா



1985ஆம் ஆண்டு இதேதினத்தில் எதிர்பாராத விதமாக நிகழ்ந்த கைக்குண்டு வெடிவிபத்தினால் எமைப்பிரிந்த

ஞானம் (சா. தனபாலசிங்கம் - கீரிமலை)

1986ஆம் ஆண்டு தமிழீழ கடற்பரப்பில் (மாதகலுக்கு வடக்கே) எமது படகொன்றின் மீது சிறிலங்கா படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

# 45-ம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

ஈன்றவர் கண்ணில் மலர்ந்தது

05 — 07 — 1976



ஈழவர் மண்ணில் சொரிந்தது

21 — 07 — 1991

## வீரவேங்கை நேரு
### (சாம்பமூர்த்தி குமரேசன்)
புத்தூர் மேற்கு, புத்தூர்

நாட்டினிலே மக்கள்படும் துன்பமதை நீக்கிட
நாமும் இணைந்திட வேண்டுமென்று
தக்கதோர் தருணத்தில் அடக்கமொடு வீரனாய்
தமிழினம் காக்கவென்று சென்றீர்
அடங்கா எதிரியவன் உன்னுடலை
அழித்துவிட்டான் - மடியவில்லை நீரோ
தூயதோர் வடிவெடுத்து வானிலே தவழ்கிறீர்
தூய்மையினை நாமறிவோம்
ஈழமது விரைந்து கண்டிடவே
ஈழமண்ணில் தவழ்ந்திடுவீர்!

(ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவுகூர்ந்து அஞ்சலிப்போம்)

நேருவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று 03-09-1991 செவ்வாய்க் கிழமை காலை 4.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதில் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், சகபோராளிகள், சுற்றத்தவர்கள், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

பாலகன் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து நிற்கும்

உமது அன்பு அப்பா, அம்மா சகோதரர், மற்றும் உற்றார், உறவினர்கள்.

ஐயன் வீதி,
(சிவன் கோவிலடி)
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

(R/1693)

---

யாழ்ப்பாணம்.

உடன் பிறவா சகோதர சகோதரிகள், உயிர்நண்பர்கள்

(B-3047)

---

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கார்த்திகேசு சிவபாதசுந்தரம்
(ஓய்வு பெற்ற மலேரியா தடுப்பு இயக்க வெளிக்கள உதவியாளர்)

அன்னை மடியில் 11 - 02 - 1931

ஆண்டவன் அடியில் 04 - 09 - 1988

திதி: 03 - 09 - 1991

பாசமுள்ள அப்பாவே! எங்களை தனியே தவிக்க விட்டுச் சென்று மூன்றாண்டு ஓடிச் சென்றன. நாங்கள் இன்றும் உங்கள் நினைவால் தான் வாடிக் கொண்டிருக்கிறோம். எத்தனை பேருக்கு நல்வழி காட்டிவைத்தீர்கள். இன்று எமக்கு நல்வழி சொல்ல யாரப்பா இருக்கிறார்கள்? அப்பா என்ற சொல்லுக்கு அநாதைகளாகி விட்டோம். எங்கள் வாழ்நாட்கள் உங்கள் நினைவுடன் தான்'

சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

உங்கள் நினைவால் வாடும் மனைவி, பிள்ளைகள்

பிள்ளையார் கோவிலடி,
தையிட்டி,
காங்கேசன்துறை.

(R-1684)

---

தது. அதன்பின் துடுப்பெடுத்தாட களத்தில் இறங்கிய தொம்மைப்பிள்ளை குணம், அல்பிரட் ரெட்ணா ஆகிய இரு வீரர்களும் நிதானமாகவும், சாதுரியமாகவும் ஆடி ஓட்டங்களை எடுத்ததினால் ஈச்சமோட்டை அணி மீட்சி பெற்றது.

---

இவருடன் வீரமரணமடைந்த ... ஏனைய போராளிகளையும் இந்நாளில் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறோம்.

இப்படிக்கு
குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர்கள்

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்

(B/3048)

---

# நினைவு கூருகின்றோம்...



1991 - 09 - 03

## பெனா

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் எதிர்பாராத விதமாக நிகழ்ந்த கைக்குண்டு வெடிவிபத்தினால் எமைப்பிரிந்த

ஞானம் (சா. தனபாலசிங்கம் - கீரிமலை)

1986ஆம் ஆண்டு தமிழீழ கடற்பரப்பில் (மாதகலுக்கு வடக்கே) எமது படகொன்றின் மீது சிறிலங்கா படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

லெப்.சுதர்சன் (வைத்திலிங்கம் ஜீவானந்தம் - புன்னாலைக்கட்டுவன், தெற்கு)

குயிலன் (இராசரத்தினம் ரவீந்திரன் - 'இராஜவில்லா' நாவலடி, அல்வாய்)

நீசன் (ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரமரணமெய்திய

டயஸ் (யேசு ராஜ்குமார் - வலையிறவு)

இதே சம்பவத்தில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

வில்லியம் (நிராஜ்) கிங்ஸ்லி.

1989ஆம் ஆண்டு அளவெட்டியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரமரணமெய்திய

வித்தியா (விநாயகமூர்த்தி வித்தியாதரன் - அளவெட்டி)

மன்னாரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பள்ளிமுனையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1990ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான மோதலின் போது எறிகணைத் தாக்குதலில் காயமுற்று பின்னர் வீரமரணமெய்திய

பெனா (கிறிஸ்தோப்பர் கிளிற்றன் நிர்மலன் - இல.31, பெரியபண்டி விரிச்சான். மன்னார்)

யாழ். கோட்டைப்பகுதியில் பொறிவெடி வைத்து விட்டு வரும் போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த

பாபு (ஐயப்பெருமாள் ஜெயகுமார் - ஊறணி காங்கேசன்துறை)

தமிழகம் நோக்கிச் சென்ற அகதிகள் படகு மீது தமிழீழ கடற்பரப்பில் (பருத்தித்துறை) சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ பெனா என்னும் மாவீரரின் பெயர் கடந்த 3-8-91 அன்றைய தினமும் தவறுதலாக வெளிவந்துவிட்டது.

(B/3046)

- விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

**சிந்தனைக்கு**

சாக்குக் கூறும் ஆற்றல் பெற்றவன் சாதனை எதுவும் செய்வதற்கு தகுதியற்றவன்

— பெஞ்சமின் ஃபிராங்ளின்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 03-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5268
த. பெ. எண் 65


# கொழும்பு நெருக்கடியில் தமிழர். பிரச்சினை


விடுதலைப் புலிகளுடன் புதிதாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளை அடுத்து செயலிழந்து போகும் நிலை ஏற்பட்டிருப்பதாக உயர் பாதுகாப்பு அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளதாகவும், விடுதலைப் புலிகளுடன் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அமைச்சர் எஸ். தொண்டமான் இந்த வாரம் வடமாகாணத்திற்கு மேற்கொள்ள விருந்த விஜயம் அரசியல் நெருக்கடிகளை அடுத்து தடைப்பட்டிருப்பதாகவும் கொழும்பில் இருந்து வெளியாகும் 'சண்டேரைம்ஸ்' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் உண்மையில் கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் அமைச்சர் தொண்டமானின் விஜயம் ரத்துச் செய்யப்படவில்லை. மாறாக, கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியினால்தான் தொண்டமானின் வடபகுதி விஜயம் பற்றி முக்கியமாகப் பேசப்படுகின்றது. தமிழர் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க முற்படாமல் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா காலம் கடத்துவதாகவும், முயற்சிகள் மேற்கொள்ளவில்லை எனவும், அதிருப்தியாளர்கள் தமது அரசியலில் லாபம் தேடும் முயற்சிக்காக வைத்த குற்றச்சாட்டை மழுங்கடிக்கும் முயற்சியே அப்பத்திரிகைச் செய்தியாகும்.

ஆனையிறவு மோதலைத் தொடர்ந்தும் இந்தியாவில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையைத் தொடர்ந்தும், புலிகள் பலம் இழந்து விட்டனர் என்பது சிறிலங்கா இராணுவத்தரப்பினரின் கணிப்பாகும். இதனை சிறிலங்கா இராணுவத் தளபதிகள் தமது அண்மைக்காலப் பேட்டிகளின் போதும் வெளிப்படையாகக் கூறியும் வந்துள்ளனர். தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளுக்கான ஆயத்தங்களிலும் ஈடுபட்டனர். பெருமளவு ஆயுதக் கொள்வனவும் நடைபெற்றது. வடக்கை புலிகளிடம் இருந்து மீட்க இந்த வருட இறுதிவரையும் கால அவகாசமும் அரசாங்கத்திடம் கோரியும் இருந்தனர்.

மேலும், தொண்டமான் அடுத்தவாரம் அளவில் வடமாகாணம் செல்லவிருந்தார் என்பது அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டிருக்குமாயின் இது பெரும் புரட்டாகும். தொண்டமான் வடக்கே வர விரும்பினால் வரலாம் எனப் புலிகள் அறிவித்த போது தற்பொழுது உடன் வடக்கே செல்வதற்கான வாய்ப்பு இல்லை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவின்படியே தீர்மானம் எடுக்கப்படும் என தொண்டமான் தெரிவித்திருந்தார்.

அத்தோடு 'சண்டேரைம்சில்' குறிப்பிட்டது போல் விடுதலைப் புலிகள் தொண்டமானை ஒரு போதும் இடைத்தரகராக நியமிக்கவும் இல்லை. இனப்பிரச்சினை தீர்விற்கு தொண்டமான் முயற்சித்தால் வரவேற்போம் என்றே கூறியிருந்தனர். ஆரம்பத்தில் இதற்கான




விடுதலைப்புலிகள் எத்தகையவர்கள் என்பதை தனது கண்ணெதிரே கண்ட சம்பவங்கள் மூலம் வெளியுலகத்திற்கு கொண்டு வந்தார் 'ஸ்கண்டி நேவிய' நாடொன்றின் பத்திரிகையாளர் ஒருவர். தமிழகத்திலிருந்து தமிழீழம் நோக்கி வருகையில் சிறிலங்கா அரசாங்கத்தின் பாரிய கடற்படைப் படகு ஒன்று மேற்கொண்ட தாக்குதலின் போது புலிகள் எவ்வாறு செயற்பட்டனர்? கடற்படைப் படகு நெருங்குகையில் இறுதியில் புலிகள் ஒவ்வொருவராக சயனைற்றை விழுங்கும் போது தனது நிலை எப்படி இருந்தது? அந்த நிலையிலும் கூட — சடலமாகத்தானும் எதிரியின் கையில் பிடிபடாமல் இருப்பதற்காக கடலில் குதித்து மரணித்த அவர்களின் தீரம் எப்படி இருந்தது என்பதை அவர் விபரித்திருந்தார். அந்த மயிர்க்கூச்செறியும் சம்பவத்தில் அவர் கடலில் குதித்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியிருந்தார். இச்சம்பவம் 1986ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3ஆம் தேதி நடைபெற்றது. நாட்டின் விடுதலைக்காய் நஞ்சை ஏற்றுக்கொண்ட அந்த 3 போராளிகளில் ஒருவன்தான் குயிலன்.

04.07.64இல் தமிழீழ மண்ணில் உதித்தவன் இவன், விளையாட்டிலும் கல்வியிலும் திறமையானவனாக விளங்கினாலும், இவன் ஒரு குழப்படிகாரனாகவே இருந்தான். இவனது குழப்படிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த காலத்திலும். ஏன்? இணைந்திருந்த காலத்திலும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. இயக்கத்துடன் இவன் 1983ஆம் ஆண்டிலேயே தொடர்பு கொண்டிருந்தாலும், கட்டுப்பாடுகளிற்குள் அடங்கிப் போகும் காலம் வரை இவன் முழுநேர உறுப்பினனாக இணைத்துக்கொள்ளப்படவில்லை.

இவன் இயக்கத்துடன் தொடர்பு கொள்வதற்குப் பட்டபாடோ சொல்லி முடியாது. எங்கும் இருப்பவர்கள் போலத்தோற்றமளித்தாலும் அக்காலத்தில் புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்கள் தொகை இரட்டை இலக்கத்திலேயே இருந்தது. போராட்டத்தை நசுக்க தமது உளவுப் படையின் துணையுடன் 'புலிகள் எங்கே?, புலிகள் எங்கே?' என்று மூலை முடுக்கெல்லாம் தேடித் திரிந்தனர் சிறிலங்காப்படையினர். அதேவேளை போராட்டத்தைப் பலப்படுத்த தாங்களும் புலிகளுடன் இணையவேண்டும் - 36 இயக்கங்கள் இருக்கின்றன - இவற்றில் உண்மையான புலிப் படையினர் எங்கே இருக்கின்றனர் என்று தேடித் திரிந்தனர் இளைஞர்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவனாக இருந்தான் குயிலன். புலிகளைச் சந்திப்பதற்காக இவன் ஒரு மார்க்கத்தைக் கைக்கொண்டான்.

அக்காலத்தில் யாழ் நகரில் அடிக்கடி தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்திகளைத் தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கும். இவற்றை ஒட்டுபவர்கள் இரவில்தானே வந்து ஒட்டிவிட்டுச் செல்கின்றனர். எனவே, யாழ் நகரிற்குள் இரவில் திரிந்தால் என்றாவது ஒருநாள் எப்படியும் உண்மையான புலிகளைச் சந்தித்துவிடலாம் என தீர்மானித்தான் குயிலன். இவனது நீண்டநாள் முயற்சி ஒருநாள் அதிகாலைப் பொழுதில் கைகூடியது. சுவரொட்டி ஒட்டவந்த புலிகளைச் சந்தித்துவிட்டான். தன்னை எப்படியும் இயக்கத்தில் இணைத்தே ஆக வேண்டுமென்று அடம்பிடித்தான். 'ஆதரவாளராக உம்மை இணைக்கிறோம் - உமது செயற்பாடுகள் தான் உம்மை முழுநேர உறுப்பினராக இணைக்கும் காலத்தைத் தீர்மானிக்க வேண்டும்' என சுவரொட்டி ஒட்ட வந்த போராளிகள் பதிலளித்தனர். ஆனாலும், அடிக்கடி தன்னை முழுநேர உறுப்பினனாக இணைக்கும்படி வற்புறுத்தி வந்தான் இவன்.

யாழ்நகரிலிருந்து பருத்தித்துறைவரை சுவரொட்டிகள் கொண்டு செல்வது - இரவு நேரம் அவற்றை ஒட்டுவது - துண்டுப்பிரசுரம் விநியோகிப்பது மற்றும் இது போன்ற ஆரம்பப் பணிகள் இவனிற்கு வழங்கப்பட்டன. ஒரு நாள் இரவு காங்கேசன் துறைப் பகுதியில் இவனும் இவனைப் போன்ற சில ஆதரவாளர்களும் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருக்கையில் திடீரென வந்த சிறிலங்காப் பொலிஸாரிடம் பிடிபட்டனர். சிங்களப் பொலீஸ் ஒருவன் இவர்களை மிரட்டினான் "பொலீஸ்



குயிலன்

ஸ்டேசனுக்கு வாங்கடா" என்று கையில் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அப்போது அவர்களுடன் வந்த தமிழ்ப் பொலிஸார் ஒருவர் இவர்கள் கொண்டு சென்ற சுவரொட்டியின் வாசகங்களைப் படித்துப் பார்த்தார். நிலைமையின் விபரீதம் விளங்கியது எப்படியும் இவர்களை காப்பாற்றவேண்டும். எனவே அவர் அதைச் செய்தார். "உங்களுக்கு கண்டறியாத ரி.வி. படக்காட்சி, ரி.வியும் காட்டக்கூடாது. ஓடுங்கோடா!" என்று ஒவ்வொருவரிற்கும் பிடரியில் தட்டித் துரத்தினார். போகும் போது "இதையுங் கொண்டு போங்கோடா!" என்று சுவரொட்டிகளையும் கையில் திணித்தார்.

குயிலனிற்கு இதே போல இன்னொரு அநுபவம் ஏற்பட்டது. ஒரு நாள் யாழ். நகரிலிருந்து பருத்தித்துறைக்குச் சென்று கொண்டிருந்தான். அங்குள்ள 'ஹாட்லிக்' கல்லூரியில்தான் உயர் தரவகுப்பில் பயின்றுகொண்டிருந்தான். இவன் சென்ற 'பஸ்ஸை' சிறிலங்கா இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர். இவனையும் மற்றும் சிலரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களை ஆனையிறவு நோக்கி கொண்டு சென்றனர். அந்தக் காலத்தில் ஆனையிறவு முகாம்தான் சித்திரவதைக்குப் பெயர் போன முகாமாக இருந்தது வெளிநாடுகளில் இருந்து தாங்கள் கற்கும் புதிய புதிய சித்திரவதை முறைகளை இந்த முகாமில் தான் செயற்படுத்திப் பார்த்தனர் சிறிலங்காப்படையினர். இவ்வாறு ஆனையிறவுமுகாம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் இராணுவ வண்டி ஒன்றின் 'ரயர்' வெடித்துவிட்டது. அதனால் பயணம் தடைப்பட்டது ஒருசில இராணுவத்தினர் ரயர் மாற்றிக் கொண்டிருக்க ஏனையோர் சாராயப் போத்தல்களுடன் மர நிழலைத் தேடிச் சென்றனர். அப்போது சிறுநீர் கழிக்கப் போவது போல் பாசாங்கு செய்த குயிலன் அங்கிருந்து பாய்ந்தோடினான். இராணுவத்தின் துப்பாக்கிகள் சடசடத்தன. வேட்டுக்களால் இவனது ஓடும் வேகத்தை அதிகரிக்கச் செய்ய மட்டுமே முடிந்தது.

வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் குயிலனின் தாயாரின்வற்புறுத்தலின் பேரில் புலிகள் இவனை முழுநேர உறுப்பினனாக இணைத்துக் கொண்டனர். புலிகளின் பயிற்சி முகாம் இவனை ஒரு முழுமையான போராளியாக்கியது.

தாயகத்தின் மண்ணை மிதிக்க - போர்க்களத்தின் கனவுகளுடன் படகில் ஏறினான் குயிலன். அதுவே அவனது கடைசிப் பயணமுமாயிற்று. அந்தப் படகில் இவனுடன் இணைந்து வந்த பத்திரிகையாளரே உலகின் சயனைற் உட்கொள்வதை நேரில் பார்த்த முதல் பத்திரிகையாளராகிறார். போராட்டத்தில் குயிலனின் பணியை - அவனது வெற்றிடத்தை இன்று அவனது சகோதரன் நிரப்பிக் கொண்டிருக்கிறான்.

# சிவராஜனுக்கு அடைக்கலம் கொடுத்தவர் கைது

(பெங்களூர்)

துள்ளது என அறிவிக்கப்பட்

# சிங்கப்பூர் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி

(சிங்கப்பூர்)

யும் பெற்றுள்ளது. 61 சத

தடைப்பட்டிருப்பதாகவும் கொழும்பில் இருந்து வெளியாகும் 'சண்டேரைம்ஸ்' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் உண்மையில் கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் அமைச்சர் தொண்டமானின் விஜயம் ரத்துச் செய்யப்படவில்லை. மாறாக, கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியினால்தான் தொண்டமானின் வடபகுதி விஜயம் பற்றி முக்கியமாகப் பேசப்படுகின்றது. தமிழர் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க முற்படாமல் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா காலம் கடத்துவதாகவும், முயற்சிகள் மேற்கொள்ளவில்லை எனவும், அதிருப்தியாளர்கள் தமது அரசியலில் லாபம் தேடும் முயற்சிக்காக வைத்த குற்றச்சாட்டை மழுங்கடிக்கும் முயற்சியே அப்பத்திரிகைச் செய்தியாகும்.

ஆனையிறவு மோதலைத் தொடர்ந்தும் இந்தியாவில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையைத் தொடர்ந்தும், புலிகள் பலம் இழந்து விட்டனர் என்பது சிறிலங்கா இராணுவத்தரப் கணிப்பாகும். இதனை சிறிலங்கா இராணுவத் தளபதிகள் தமது அண்மைக் காலப் பேட்டிகளின் போதும் வெளிப்படையாகக் கூறியும் வந்துள்ளனர் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளுக்கான ஆயத்தங்களிலும் ஈடுபட்டனர். பெருமளவு ஆயுதக் கொள்வனவும் நடைபெற்றது. வடக்கை புலிகளிடம் இருந்து மீட்க இந்த வருட இறுதிவரையும் கால அவகாசமும் அரசாங்கத்திடம் கோரியும் இருந்தனர்.

மேலும், தொண்டமான் அடுத்தவாரம் அளவில் வடமாகாணம் செல்லவிருந்தார் என்பது அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டிருக்குமாயின் இது பெரும் புரட்டாகும். தொண்டமான் வடக்கே வர விரும்பினால் வரலாம் எனப் புலிகள் அறிவித்த போது தற்பொழுது உடன் வடக்கே செல்வதற்கான வாய்ப்பு இல்லை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவின்படியே தீர்மானம் எடுக்கப்படும் என தொண்டமான் தெரிவித்திருந்தார்.

அத்தோடு 'சண்டேரைம்ஸில்' குறிப்பிட்டது போல் விடுதலைப் புலிகள் தொண்டமானை ஒரு போதும் இடைத்தரகராக நியமிக்கவும் இல்லை. இனப்பிரச்சினை தீர்விற்கு தொண்டமான் முயற்சித்தால் வரவேற்போம் என்றே கூறியிருந்தனர் ஆரம்பத்தில் இதற்கான முயற்சியில் தொண்டமான் இறங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தநிலையில் தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையைக் குழப்பியது, தொண்டமானின் வடபகுதி விஜயத்தைத் தடுத்தது என பாதுகாப்பு வட்டாரங்களும் தெரிவிப்பது பெரும் புரட்டாகும். பேச்சுவார்த்தைக்கான எந்தச் சூழல் உருவாகவுமில்லை சிறிலங்கா அரசாங்கம் அதை ஏற்படுத்த முயற்சிக்கவுமில்லை. இனப் பிரச்சினையைத் தீர்க்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் காலத்தைக் கடத்தி வந்த சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது இனப் பிரச்சினைத் தீர்வில் தான் தீவிர அக்கறையாக உள்ளதாகக் காட்டிக் கொள்வது பெரும் ஏமாற்று நடவடிக்கையாகும்.

இனப்பிரச்சினைத் தீர்விற்கென கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாட்டினால் இரண்டரை வருடமாகியும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், பாராளுமன்ற தெரிவுக்குழுவைக் கூட்டி காலத்தை நீடிக்க முற்பட்ட சிறிலங்கா அரசாங்கம், தற்பொழுது மீண்டும் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி இனப்பிரச்சினைத் தீர்வில் தனது 'அக்கறையைக்' காட்ட முயற்சிக்கின்றது. ஆனால் இதனால் நன்மை ஏதும் அரசாங்கத்திற்கு ஏற்படப் போவதில்லை.

தமிழர் தேசிய இனப்பிரச்சினை எப்பொழுதும் போலவே தற்பொழுதும் சிங்கள அரசியல்வாதிகளால் தமது அரசியல் லாபத்திற்காகப் பேசப்படுகின்றது. இதன் மூலம் சிங்கள மக்களை சிலவேளை சிங்கள அரசியல்வாதிகள் ஏமாற்றலாம். ஆனால் தமிழர் தரப்பு லலித் அத்துலத்முதலி ஆயினும்சரி பிரேமதாசா ஆயினும்சரி, ஒன்று எனத் தெளிவாகப் புரிந்துள்ளது.

படகு நெருங்குகையில் இறுதியில் புலிகள் ஒவ்வொருவராக சயனைற்றை விழுங்கும் போது தனது நிலை எப்படி இருந்தது? அந்த நிலையிலும் கூட — சடலமாகத்தானும் எதிரியின் கையில் பிடிபடாமல் இருப்பதற்காக கடலில் குதித்து மரணித்த அவர்களின் தீரம் எப்படி இருந்தது என்பதை அவர் விபரித்திருந்தார். அந்த மயிர்க்கூச்செறியும் சம்பவத்தில் அவர் கடலில் குதித்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியிருந்தார். இச்சம்பவம் 1986ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3ஆம் தேதி நடைபெற்றது. நாட்டின் விடுதலைக்காய் நஞ்சை ஏற்றுக்கொண்ட அந்த 3 போராளிகளில் ஒருவன்தான் குயிலன்.

04.07.64இல் தமிழீழ மண்ணில் உதித்தவன் இவன், விளையாட்டிலும் கல்வியிலும் திறமையானவனாக விளங்கினாலும், இவன் ஒரு குழப்படிகாரனாகவே இருந்தான். இவனது குழப்படிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த காலத்திலும், ஏன்? இணைந்திருந்த காலத்திலும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. இயக்கத்துடன் இவன் 1983ஆம் ஆண்டிலேயே தொடர்பு கொண்டிருந்தார் தமது உளவுப் படையின் துணையுடன் 'புலிகள் எங்கே?, புலிகள் எங்கே?' என்று மூலை முடுக்கெல்லாம் தேடித் திரிந்தனர் சிறிலங்காப்படையினர். அதேவேளை போராட்டத்தைப் பலப்படுத்த தாங்களும் புலிகளுடன் இணையவேண்டும் - 36 இயக்கங்கள் இருக்கின்றன - இவற்றில் உண்மையான புலிப் படையினர் எங்கே இருக்கின்றனர் என்று தேடித் திரிந்தனர் இளைஞர்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவனாக இருந்தான் குயிலன். புலிகளைச் சந்திப்பதற்காக இவன் ஒரு மார்க்கத்தைக் கைக்கொண்டான்.

அக்காலத்தில் யாழ் நகரில் அடிக்கடி தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்திகளைத் தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கும். இவற்றை ஒட்டுபவர்கள் இரவில்தானே வந்து ஒட்டிவிட்டுச் செல்கின்றனர். எனவே, யாழ் நகரிற்குள் இரவில் திரிந்தால் என்றாவது ஒருநாள் எப்படியும் உண்மையான புலிகளைச் சந்தித்துவிடலாம் என தீர்மானித்தான் குயிலன். இவனது நீண்டநாள் முயற்சி ஒருநாள் அதிகாலைப் பொழுதில் கைகூடியது. சுவரொட்டி ஒட்டவந்த புலிகளைச் சந்



குயிலன்

ஸ்டேசனுக்கு வாங்கடா'' என்று கையில் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அப்போது அவர்களுடன் வந்த தமிழ்ப் பொலிஸார் ஒருவர் இவர்கள் கொண்டு சென்ற சுவரொட்டியின் வாசகங்களைப் படித்துப் பார்த்தார். நிலைமையின் விபரீதம் விளங்கியது எப்படியும் இவர்களை காப்பாற்றவேண்டும். எனவே அவர் அதைச் செய்தார். ''உங்களுக்கு கண்டறியாத ரீ வி. படக்காட்சி, ரீ. வியும் காட்டக்கூடாது. ஒண்டும் காட்டக்கூடாது. ஓடுங்கோடா!'' என்று ஒவ்வொரு

கொண்டிருக்க ஏனையோர் சாராயப் போத்தல்களுடன் மர நிழலைத் தேடிச் சென்றனர். அப்போது சிறுநீர் கழிக்கப் போவது போல் பாசாங்கு செய்த குயிலன் அங்கிருந்து பாய்ந்தோடினான். இராணுவத்தின் துப்பாக்கிகள் சடசடத்தன. வேட்டுக்களால் இவனது ஓடும் வேகத்தை அதிகரிக்கச் செய்ய மட்டுமே முடிந்தது.

வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் குயிலனின் தாயாரின்வற்புறுத்தலின் பேரில் புலிகள் இவனை முழுநேர உறுப்பினனாக இணைத்துக் கொண்டனர். புலிகளின் பயிற்சி முகாம் இவனை ஒரு முழுமையான போராளியாக்கியது.

தாயகத்தின் மண்ணை மிதிக்க - போர்க்களத்தின் கனவுகளுடன் படகில் ஏறினான் குயிலன். அதுவே அவனது கடைசிப் பயணமுமாயிற்று. அந்தப் படகில் இவனுடன் இணைந்து வந்த பத்திரிகையாளரே உலகின் சயனைற் உட்கொள்வதை நேரில் பார்த்த முதல் பத்திரிகையாளராகிறார். போராட்டத்தில் குயிலனின் பணியை- அவனது வெற்றிடத்தை இன்று அவனது சகோதரன் நிரப்பிக் கொண்டிருக்கிறான்.

## சிவராஜனுக்கு அடைக்கலம் கொடுத்தவர் கைது

(பெங்களூர்)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கியமாக குற்றஞ்சாட்டப்பட்ட சிவராஜன். சுபா இருவருக்கும் அடைக்கலம் அளித்த குற்றத்திற்காக விடுதலைப் புலிகள் ஆதரவாளர் ஒருவரை விசேட புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் தமது வீட்டில் சிவராஜனையும், சுபாவையும் வைத்திருந்ததற்கான குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## சிங்கப்பூர் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் இடம் பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் மக்கள் செயற்கட்சி 77 இடங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

81 இடங்களுக்கான இத் தேர்தலில் மக்கள் செயற் கட்சி 77 இடங்களையும் சிங்கப்பூர் ஜனநாயகக் கட்சி மூன்று இடங்களையும், தொழிலாளர் கட்சி ஒரு இடத்தையும் பெற்றுள்ளது. 61 சதவீதமான மக்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்டார்கள்.

சென்றமுறை சிங்கப்பூரில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் எதிர்க்கட்சிகளுக்கு ஒரு இடம் மட்டும் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்திய மீனவரின் இழப்பிற்கு

# சிறிலங்காவிடம் இருந்து நட்டஈடு பெறவேண்டும் - ஜெயலலிதா

(சென்னை)

மத்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கச்சதீவின் அருகே மீன் பிடிக்கச் செல்கின்ற தமிழக மீனவர்கள்மீது சிறிலங்கா கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்துவதை நிறுத்துமாறு வலியுறுத்த வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கேட்டுக் கொண்டிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் செல்வி ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு கேட்டுள்ளார். சிறிலங்காகடற்படையின் துப்பாக்கிச்சூடுகளால்உயிரையும், உடைமைகளையும் இழந்த மீனவர்களின் குடும்பத்தினர்க்கு சிறிலங்கா அரசிடம் இருந்து நஷ்டஈடு பெறவேண்டும் என்றும் மத்திய அரசை அவர் கேட்டுள்ளார்.

கச்சதீவுக்கு அருகே கடந்த சனியன்று ராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்கு தமிழக மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படை நடத்திய தாக்குதலை அடுத்தே செல்வி ஜெயலலிதா மத்தியஅரசிடம் இந்தவேண்டுகோளை விடுத்துள்ளார்.

முன்னதாக இந்த நான்கு மீனவர்களும் சிறிலங்கா கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து இராமேஸ்வரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## சீனப் பயணம் ரத்து

கொழும்பில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா சீனாவுக்கான தனது விஜயத்தை ஒத்தி வைத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

## எறிகணைத் தாக்குதல்

சிறிலங்கா இராணுவத்தினரால் பலாலி இராணுவமுகாமில் இருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை மூன்று மணியளவில் கீரிமலைப் பகுதியை நோக்கி எறிகணைத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலால் சேதமெதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை

# யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை உடைக்கப்பட்டு நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கைலாசபிள்ளையார் கோயிலடி கிளைக் கதவு உடைக்கப்பட்டே மேற்படி திருட்டு நடைபெற்றுள்ளது.

அங்கே நிவாரணம் வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த அரிசி, மா, சீனி, பருப்பு ஆகியனவும், வேறும் சில சில்லறைப் பொருள்களுமே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தப் பெறுமதி நாற்பதாயிரம் ரூபாவரையில் இருக்கலாம் எனத்தெரிய வருகிறது. (ச)

---

### ஒலிபரப்புக்

தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தலைவர், அத்துலத் முதலியின் கடிதத்துக்குப் பதிலளிக்கையில், இந்த விடயம் பற்றி இதுவரை தனக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

லலித் அத்துலத்முதலி நடத்திய செய்தி நிருபர்கள் மாநாடு பற்றித் தனக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் குறிப்பீட்டிருக்கிறார்.

### லெப். இளஞ்செழியன் ·

குமாரனின் தாயார் தலைமை தாங்குகின்றார். லெப். நித்திலா, கரும்புலி கப்டன் மில்லர் ஆகியோரின் அன்னையர்கள் விளக்கேற்றி வைப்பர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தனது ஐந்து பிள்ளைகளை இணைத்த மாவீரன் யசோவின் தாயார் சிறப்புரை நிகழ்த்துவார். இரங்கலுரையை மேஜர் ஜேம்சின் தந்தையார் நிகழ்த்துவார்.

லெப். இளஞ்செழியனின் 45ஆம் நாள் நிகழ்வில் நடைபெறும் உருவப்பட திறப்பு விழாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்கின்றனர். (ச)

### ரங்கன்

னின் சாரதியாகிய ரங்கனை சென்னை விசேட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

ராஜசூரியர் எனப்படும் ரங்கன் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த நடராஜா என்பவருடைய மகன் என்றும் இவர் திருவான்மியூரில் தங்கியிருந்தார் என்றும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

### காஷ்மீர்

திய இராணுவ நிலைகள் மீது பாகிஸ்தானிய இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல்களை மேற் கொண்டது தெரிந்ததே.

அந்த வேளையில் இந்திய எல்லையை ஊடுருவி பாகிஸ்தானிய இராணுவத்தினரது ஆயுதங்களும், சடலங்களுமே இது என்றும் இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

### அதிருப்தியாளர்களும்

மன்ற உறுப்பினர்களில் சுமார் 45 பேர் வரை குற்றச் சாட்டு மனுவில் கையெழுத்து வைத்திருப்பதாக நம்பப்படுகிறது. சிலர் கையெழுத்திட்டதை ஒப்புக்கொண்டுள்ளனர். பலர் ஒப்புக்கொள்ளவில்லை.

### இந்திய–பாக்

திய கிராமங்களில் பாகிஸ்தான் படைகள் பலமான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதை அடுத்து மூன்று இந்தியர்கள் கொல்லப்பட்டார்கள். மேலும் நான்குபேர் காயமடைந்தனர். பாடசாலை ஒன்று சேதமானது என இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்தியா ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பூஞ்சி மாவட்டத்தி எல்லைப் பகுதியிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் அளவு தூரத்தினுள் அமைந்துள்ள கிராமங்களின் மீது நடத்தப்பட்டிருக்கும் இந்தப் பீரங்கித் தாக்குதல் 1971ஆம் ஆண்டு போருக்குப் பின்னர் நடந்துள்ள முதலாவது பெரிய பீரங்கித் தாக்குதலாகும். இத்தாக்குதலின்போது நூற்றுக்கு மேற்பட்ட பீரங்கிக்குண்டுகள் இந்திய கிராமங்களுக்குள் வீழ்ந்து வெடித்ததாக இந்தியா தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது எல்லைக் கோட்டிற்கருகே பாகிஸ்தானிய படைகள் அத்துமீறி பிரவேசித்து விட்டுச்சென்ற வீடுகள் சிலவற்றைக் காவல் செய்வதற்காக இந்திய ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பதிலடியே இந்தத் தாக்குதல் என்று இந்திய தரப்பில் சொல்லப்படுகிறது.

இதேவேளை தமது தரப்பில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற மோதலில் மூன்று இராணுவத்தினரே உயிர் இழந்தனர் என்றும், இந்தியப் படைகளே முதலில் எல்லைகளுக்குள் ஊடுருவித் தாக்கின் என்றும் பாகிஸ்தான் இராணுவ வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

மேலும் தொடர்ந்து இந்தியப் படைக்கும் பாகிஸ்தான் படைக்கும் இடையே மோதல் நடந்து கொண்டிருப்பதாகப் பாகிஸ்தான் கூறியிருக்கிறது.

# சோவியத்தின் ஒற்றுமைக்கு புதிய ஏழு அம்சத் திட்டம்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனுக்கான எதிர்கால அமைப்பு ஒன்று பற்றி முடிவு செய்யப்படும் வரை பொருளாதார ஒத்துழைப்பு உட்பட ஏழு அம்சத் திட்டமொன்றுக்கு சோவியத் ஜனாதிபதி, கொர்பசேவ்வும் பதினொரு குடியரசுகளின் தலைவர்களும் யோசனை ஒன்றை முன் வைத்துள்ளார்கள். இந்த ஏழு அம்சத் திட்டத்தை சோவியத் பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு குடியரசும் சுதந்திரமான ஓர் முறையில் தத்தமது விவகாரங்களை நிர்வகித்துக் கொள்வதான ஏற்பாட்டுடன், சோவியத் யூனியனுடன் ஆட்சி முறிவு பெற்ற நாடுகளை ஒரு யூனியனாக மாற்றுவதற்கு இத் திட்டம் வழி வகுக்கின்றது.

நேற்றுக்காலை கிரம்ளினில் 2500 பேர் கொண்ட சோவியத் பாராளுமன்றம் கூடியது. அவசரக் கூட்டத் தொடர் தொடங்கிய உடனேயே இத் திட்டம் சோவியத் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது.

பதினைந்து குடியரசுகளுக்கிடையே பொருளாதார ஒப்பந்தம் ஒன்றைத் தயாரிப்பது, புதிய யூனியனுக்காக ஒரே தனிப்பட்ட ஆயுதப்படையைப் பராமரிப்பது, இராணுவம், உளவுத்துறையான கே. ஜி. பி. மற்றும் உள்துறை அமைச்சகம் ஆகியவற்றில் தீவிரமான சீர் திருத்தங்களைப் புகுத்துவது, புதியதோர் அரசியல் சாஸனத்தை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளுக்கு இந்தத் திட்டம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

# செப்டம்பர் 10 மரதன் ஓட்ட விண்ணப்ப முடிவு நாள்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகள விழா மாவட்ட மட்டத்திலான போட்டிகளான ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி, துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி ஆகியவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி 10-09-91 ஆகும். பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் 10-09-91 க்கு முன் அந்தந்தப் பகுதி வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் தங்கள் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாவட்ட மட்ட போட்டிகளின் விபரம்:-

| நிகழ்ச்சி | | திகதி | ஆரம்பிக்கும் இடம் |
|---|---|---|---|
| மரதன் ஓட்டம் | ஆண் | 15.9.91 | யாழ். மத்திய கல்லூரி மைதானம் |
| மரதன் ஓட்டம் | பெண் | ,, | சுன்னாகம் சந்தி |
| துவிச்சக்கர வண்டி ஓட்டம் | ஆண்/பெண் | 16.9.91 | கோண்டாவில் சந்தி |
| வேக நடை | ஆண்/பெண் | 17.9.91 | நல்லூர் கந்தன் ஆலயம் முன்றல் |

# தியாகி திலீபன் தடகளபோட்டி திகதிகள் அறிவிப்பு

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகள விழா வட்டவை மட்டத்தில் நடைபெறவுள்ளது. அவற்றிற்கான திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

| திகதி | பிரிவு | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 6.9.91, 7.9.91 | கோப்பாய் | நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி |
| ,, ,, | சண்டிலிப்பாய் | பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி |
| 7.9.91, 8.9.91 | சாவகச்சேரி | மட்டுவில் மகா வித்தியாலயம் |
| ,, ,, | சங்கானை | அராலி மாவத்தை விளையாட்டரங்கு |
| 9.9.91, 10.9.91 | யாழ்ப்பாணம் | யாழ். மத்திய கல்லூரி |
| ,, ,, | கரவெட்டி | நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| 10.9.91, 11.9.91 | தெல்லிப்பளை | மகாஜனக் கல்லூரி |
| 11.9.91, 12.9.91 | பருத்தித்துறை | ஹாட்லிக் கல்லூரி |
| ,, ,, | நல்லூர் | கனகரத்தினம் மகா வித்தியாலயம் |
| ,, ,, | பளை | இத்தாவில் விளையாட்டரங்கு |
| 12.9.91, 13.9.91 | உடுவில் | ஸ்கந்தவரோதயாக் கல்லூரி |
| ,, ,, | மருதங்கேணி | செம்பியன்பற்று மகா வித்தியாலயம் |

## 'தியாக தீபம்' லெப்டினன்ட் கேணல் திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு நாள்

## கட்டுரை, கவிதைப் போட்டிகள்

மேற்படி நினைவு நாள் போட்டிகளுக்கான கட்டுரை, கவிதை எழுத்துத் தேர்வுகள் எதிர்வரும் 14-09-91 அன்று காலை 10-00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடாத்தப்படும்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்வோர் பெயர், வயது, முகவரி, பங்குபற்றும் போட்டி முதலிய விபரங்களடங்கிய விண்ணப்பங்களை இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னராக திலீபன் ஞாபகார்த்த கட்டுரை, கவிதை அமைப்புக்குழு, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரிவுச்செயலகம், வடமராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தின் தலைவர் மேலும் குறிப் பீட்டிருக்கிறார்.

லெப். இளஞ்செழியன் · குமாரனின் தாயார் தலைமை தாங்குகின்றார். லெப். நித்திலா, கரும்புலி கப்டன் மில்லர் ஆகியோரின் அன்னையர்கள் விளக்கேற்றி வைப்பர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தனது ஐந்து பிள்ளைகளை இணைத்த மாவீரன் யசோவின் தாயார் சிறப்புரை நிகழ்த்துவார். இரங்கலுரையை மேஜர் ஜேம்சின் தந்தையார் நிகழ்த்துவார்.

லெப். இளஞ்செழியனின் 45ஆம் நாள் நிகழ்வில் நடைபெறும் உருவப்பட திறப்பு விழாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்கின்றனர். (ச)

காஷ்மீர்

திய இராணுவ நிலைகள் மீது பாகிஸ்தானிய இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல்களை மேற் கொண்டது தெரிந்ததே.

அந்த வேளையில் இந்திய எல்லையை ஊடுருவி பாகிஸ்தானிய இராணுவத்தினரது ஆயுதங்களும், சடலங்களுமே இது என்றும் இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அதிருப்தியாளர்களும்

மன்ற உறுப்பினர்களில் சுமார் 45 பேர் வரை குற்றச் சாட்டு மனுவில் கையெழுத்து வைத்திருப்பதாக நம்பப்படுகிறது. சிலர் கையெழுத்திட்டதை ஒப்புக்கொண்டுள்ளனர். பலர் ஒப்புக்கொள்ளவில்லை.

வேசித்து விட்டுச்சென்ற வீடுகள் சிலவற்றைக் காவல் செய்வதற்காக இந்திய ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பதிலடியே இந்தத் தாக்குதல் என்று இந்திய தரப்பில் சொல்லப்படுகிறது.

இதேவேளை தமது தரப்பில் கடந்த ஞாயிறு இடம் பெற்ற மோதலில் மூன்று இராணுவத்தினரே உயிர் இழந்தனர் என்றும், இந்தியப் படைகளே முதலில் எல்லைகளுக்குள் ஊடுருவித் தாக்கின் என்றும் பாகிஸ்தான் இராணுவ வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

மேலும் தொடர்ந்து இந்தியப் படைக்கும் பாகிஸ்தான் படைக்கும் இடையே மோதல் நடந்து கொண்டிருப்பதாகப் பாகிஸ்தான் கூறியிருக்கிறது.

## 'தியாக தீபம்' லெப்டினன்ட் கேணல் திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு நாள்

# கட்டுரை, கவிதைப் போட்டிகள்

மேற்படி நினைவு நான் போட்டிகளுக்கான கட்டுரை, கவிதை எழுத்துத் தேர்வுகள் எதிர்வரும் 14-09-91 அன்று காலை 10-00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடாத்தப்படும்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்வோர் பெயர், வயது, முகவரி, பங்குபற்றும் போட்டி முதலிய விபரங்களடங்கிய விண்ணப்பங்களை இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னராக திலீபன் ஞாபகார்த்த கட்டுரை, கவிதை அமைப்புக்குழு, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரிவுச்செயலகம், வடமராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஒருவர் கவிதை, கட்டுரையாகிய இருபோட்டிகளிலும் கலந்துகொள்ள விரும்பின் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டும் முதல் மூவருக்கும் இம்மாதம் 25ஆம் திகதி நெல்லியடி மாவீரர் கலையரங்கில் நடைபெறவுள்ள திலீபனின் ஞாபகார்த்த அஞ்சலிக் கூட்டத்தில் பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகள் யாவும் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்ற ரீதியில் நடைபெறும்.

## போட்டி விதிகள்

கட்டுரை: கீழ்க்காணும் தலைப்புக்களில் குலுக்கல் சீட்டுமூலம் பெறப்படும் ஒரு தலைப்பில் 300 சொற்களைக் கொண்ட கட்டுரையை ஒரு மணி நேரத்தில் எழுதுதல் வேண்டும்.

1. போர் இன்னும் ஓயவில்லை
2. நம்புங்கள் தமிழீழம் நாளைபிறக்கும்
3. தாயக மீட்புப் போரில் திலீபனின் பங்கு
4. ஆனையிறவுப் போரில் தமிழரின் தேசியப்படை
5 தமிழ்த் தேசியஇனத்தின்விடுதலைக்கனவு சுமந்த மாவீரர்கள்

கவிதை: உடனே கொடுக்கப்படும் ஒருதலைப்பில் 20 முதல 32 அடிகள் கொண்ட கவிதையை ஒரு மணி நேரத்துக்குள் எழுதுதல் வேண்டும். கவிதைகள் மரபுவழிக் கவிதைகளாகவோ அன்றி புதுக்கவிதைகளாகவோ அமையலாம். கருத்துக்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

தியாகிதிலீபன் ஞாபகார்த்த கட்டுரை, கவிதைப்போட்டி
அமைப்புக்குழு.

(B/3044)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகள விழா மாவட்ட மட்டத்திலான போட்டிகளான ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி, துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி ஆகியவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி 10-09-91 ஆகும். பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் 10-09-91 க்கு முன் அந்தந்தப் பகுதி வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் தங்கள் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாவட்ட மட்ட போட்டிகளின் விபரம்:-

| நிகழ்ச்சி | | திகதி | ஆரம்பிக்கும் இடம் |
|---|---|---|---|
| மரதன் ஓட்டம் | ஆண் | 15.9.91 | யாழ். மத்திய கல்லூரி மைதானம் |
| மரதன் ஓட்டம் | பெண் | ,, | கன்னாகம் சந்தி |
| துவிச்சக்கர வண்டி ஓட்டம் | ஆண்/பெண் | 16.9.91 | கோண்டாவில் சந்தி |
| வேக நடை | ஆண்/பெண் | 17.9.91 | நல்லூர் கந்தன் ஆலயம் முன்றல் |

# தியாகி திலீபன் தடகளபோட்டி திகதிகள் அறிவிப்பு

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகள விழா வட்டவை மட்டத்தில் நடைபெறவுள்ளது. அவற்றிற்கான திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

| திகதி | பிரிவு | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 6.9.91, 7 9.91 | கோப்பாய் | நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி |
| ,, ,, | சண்டிலிப்பாய் | பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி |
| 7.9.91, 8 9.91 | சாவகச்சேரி | மட்டுவில் மகா வித்தியாலயம் |
| ,, ,, | சங்கானை | அராலி மாவத்தை விளையாட்டரங்கு |
| 9.9.91, 10.9.91 | யாழ்ப்பாணம் | யாழ். மத்திய கல்லூரி |
| ,, ,, | சரவெட்டி | நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| 10.9.91, 11.9.91 | தெல்லிப்பளை | மகாஜனக் கல்லூரி |
| 11.9.91, 12.9.91 | பருத்தித்துறை | ஹாட்லிக் கல்லூரி |
| ,, ,, | நல்லூர் | கனகரத்தினம் மகா வித்தியாலயம் |
| ,, ,, | பளை | இத்தாவில் விளையாட்டரங்கு |
| 12.9.91, 13 9 91 | உடுவில் | ஸ்கந்தவரோதயாக் கல்லூரி |
| ,, ,, | மருதங்கேணி | செம்பியன்பற்று மகா வித்தியாலயம் |

போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்தவர்கள் அந்தந்த வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொண்டு தங்கள் இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மோதல்

ஜம்மு-காஷ்மீர் பகுதியான கூர்ச்சில் இடம்பெறும் இப் பேச்சுவார்த்தையில் இந்திய பாகிஸ்தான் தரப்பு இராணுவ அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

வடபகுதியில்

குறைப்பதற்காக ஐந்து கூடாரங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குள் கட்டில்கள் போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பிரயாணிகள் யாவரும் தனித்தனியாகவே அங்கு செல்ல வேண்டும் என்றும், இறுதியில் அங்குள்ளவரால் வழங்கப்படும் வெள்ளைத் தாளில் பயணிகள் தமது அபிப்பிராயங்களை எழுதி பெட்டி ஒன்றினுள் போட வேண்டும் என்றும் கூறப்பட்டது. (தி)

புதுக்கோட்டையில்

## பொலிஸ் துப்பாக்கிச் சூடு; இரு பொதுமக்கள் பலி

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டிற்கு சிறுவன் உட்பட இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸார் விடுத்துள்ள அறிக்கையில் ''இந்தக் கிராமத்திலுள்ள அச்சக உரிமையாளர் ஒருவருக்கும் அவ்வூரில் ஒரு குழுவினருக்கும் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த அச்சக உரிமையாளரையும், ஊழியர்களையும் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல விடாது தடுத்த கும்பலை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இந்த உயிர் இழப்புக்கள் ஏற்பட்டதாக'' தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு

களுக்குப் பணம் கொடுத்தார்கள் என்றுஅரசின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கும்சண்டே ஒப்சேவர் செய்தித்தாளில் வெளிவந்த செய்தியையும் மறுத்தார்.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றச் சாட்டில் கையெழுத்திட்டவர்களுக்கு சூதாட்ட கேளிக்கைக் கூடங்களின் உரிமையாளர் தலா ரூ.10லட்சம்பணம் கொடுத்ததாக சண்டே ஒப்சேவர் செய்தி வெளியிட்டிருந்தது.

அரசியல்

ருக்கும் பிரிவு சிறிலங்க சுதந்திரக் கட்சிக்கு சாதகமாக இருக்கும் எனப் பார்வையாளர்கள்கருதுகின்றர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.